# வாழவைக்கும் ஜீவன்

## ஜீவன் இரத்த வங்கி & ஆராய்ச்சி கூடம்





**''இன்று வீடு திரும்பும்பொழுது விபத்து ஏற்பட்டால், உங்களுக்கு எங்கிருந்து இரத்தம் கொணர்ந்து வர வேண்டும்?''**

1995ஆம் ஆண்டு பிறக்க இருக்கும் தருவாயில், டாக்டர். பி. ஸ்ரீநிவாசனிடம், டாக்டர். சரண்யா கேட்ட கேள்வி இது.

சில வேளைகளில், நம்மை சட்டென்று தாக்கும் உண்மையே ஒரு பெரிய எண்ணம் உருவாவதற்குக் காரணமாகும். இது அந்த மாதிரியான ஒரு தருணம்.

**டாக்டர். பி. ஸ்ரீநிவாசன்**

காஞ்சிபுரத்தில் பிறந்த டாக்டர். ஸ்ரீநிவாசனின் தந்தை ஒரு பேராசிரியர்; தாயார், இல்லத்தரசி. தூத்துக்குடியில் வளர்ந்த அவர், உயர்நிலை வகுப்பு வரை தமிழ் வழிப் பாடங்கள் (tamizh medium) படித்தார். மிகச் சிறந்த மாணாக்கராக விளங்கினார் அவர். எந்தவித உதவியும் இல்லாமல் மாரடைப்பால் அவதியுற்ற அவரது பாட்டனாரின் நிலை, மருத்துவராவதற்கு அவரைத் தூண்டியது.

பள்ளிப் படிப்பை முடித்தவுடன், சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் மாணவராகச் சேர்ந்தார்.

மருத்துவப்படிப்பின் மூன்றாம் வருடத்தின்பொழுது, இதயத்துடிப்புமானி (stethoscope) அவர் கைக்கு வந்தது. அதன் மூலம், முதலில் அவர் கேட்டது தனது தந்தையின் இதயத்துடிப்புகளைத்தான். தனது தந்தையின் இதயத்தில் துளை இருப்பதை உடனே அவரால் உணர முடிந்தது.

அன்றுமுதல், இதயத்துடிப்புகளை ஒலிநாடாவில் பதிவு செய்யத் தொடங்கினார். 60 விதமான இதயக்கோளாறுகளை அவரால் ஒலிப்பதிவு செய்ய முடிந்தது. எம்.பி.பி.எஸ். முடித்த பிறகு, சென்னை மருத்துவ கல்லூரியில், மருத்துவத்தில் முதுநிலைப் பட்டம் (M.D.) பெற்றார். மருத்துவ கல்விக்காக சில ஆயிரம் ரூபாய்களே செலவழித்த இவர், சமுதாயத்திற்குத் தாம் பெரிதும் கடமைப்பட்டிருப்பதாகக் கருதுகிறார்.

வட சென்னையில் உள்ள ஒரு மருத்துவமனையில் முழுநேர மருத்துவராகச் சேர்ந்த டாக்டர். ஸ்ரீநிவாசன், 'நீரிழிவு நோயும் கர்ப்பமும்' (Diabetes and Pregnancy) என்ற தலைப்பில் பி.ஹெச்.டி (Ph.D) செய்து ஸ்காட்லாண்ட் நாட்டில் அந்த கட்டுரைகளை வழங்கி, அங்கு சில மாதங்கள் பணி புரிந்தார். இது அவருக்கு ஆதரவு ஊதியம் (common wealth fellowship) கிடைக்க ஏதுவாக அமைய, அங்குள்ள பல்கலைகழகத்தில் மூத்த பதிவாளராக (Senior Registrat) சேர்ந்தார். 32 வயதில் இந்தியாவுக்குத் திரும்பிய அவர், தன்னைவிட இளநிலையரான (junior) ஒருவருக்குத் தனது பதவி கொடுக்கப்பட்டது மற்றுமன்றி, அவர் கீழ் பணி செய்யும் நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டதை அறிந்து வேலையை ராஜினாமா செய்தார். அவருடன் வேலை செய்த நான்கு தொழில் நுட்பப் பணியாளர்களின் (technicians) ஆலோசனையின் பேரில் ஜூன் மாதம் 1985ஆம் ஆண்டு 'லிஸ்டர் ஆய்வகம்' (Lister Laboratories) தொடங்கப்பட்டது. ஆய்வகப் பகுப்பிற்கு (laboratory analysis) துணைகாரணமாய் இருந்த ஸ்காட்லாண்ட் நாட்டைச் சேர்ந்த ஜோஸ்ஃப் லிஸ்டரின் (Joseph Lister) நினைவாக இதற்குப் பெயரிடப்பட்டது.

5-6 மாதங்களுக்குப் பிறகு ஒரு முக்கிய நபர் லிஸ்டரிலிருந்து விலக, டாக்டர். சரண்யா லிஸ்டரில் சேர்ந்தார். 1986 ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியில் சேர்ந்த டாக்டர். சரண்யாவின் சேவை சுமார் 30 ஆண்டுகளாக இன்றுவரை தொடர்கிறது.

**டாக்டர். சரண்யா**

சென்னையைச் சேர்ந்தவர் டாக்டர். சரண்யா. தாவரவியல்/விலங்கியல் அல்லது இலக்கியம் படிக்க ஆர்வமாக இருந்தவர், மருத்துவப்படிப்பை சென்னை மருத்துவ கல்லூரியில் படிக்க நேர்ந்தது. உளமருத்துவம் (Psychiatry) அல்லது மகப்பேறு மருத்துவம் (Obstetrics) படிப்பதை அவர் விரும்பினாலும், அவரது தந்தையும், கணவரும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், நுண்ணறிவியலில் எம்.எஸ். (M.S.) படிப்பு முடித்தார். படிப்பை முடித்து ஒரு வருடம் ஆகியும் அவருக்கு வேலை கிடைக்கவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் நுங்கம்பாக்கத்தில்- அவரது வீட்டு அருகாமையிலேயே இருக்கும்- ஒரு 'புதிய' ஆய்வகத்தில் வேலை வாய்ப்பு இருக்கக்கூடும் என கல்லூரி நண்பர் ஒருவர் கூறினார். நேர்முகத்தேர்வை நடத்திய டாக்டர். ஸ்ரீநிவாசன், மாதம் ரூ.750/- சம்பளத்துடன் அவருக்கு அந்த வேலையை அளித்தார். தொழில்நுட்பப்பணியாளர்களே (technicians) பரிசோதனை செய்து நோயைக் கண்டறிந்து (diagnosis) வந்த அந்த ஆய்வகத்தில், டாக்டர். சரண்யா மட்டுமே முறைப்படி மருத்துவம் பயின்றவர். பல்பணி (multi-tasking) செய்வதில் வல்லவரான டாக்டர். சரண்யா, ஒழுங்கையும், நெறிகளையும் சரியானபடி முறைப்படுத்துபவர். தரத்துக்கு அவர் கொடுத்த முக்கியத்துவத்தை ஏனைய பிற மருத்துவர்கள் சில காலங்களுக்குள்ளாகவே நன்கு உணரத் தொடங்கினர்.

**லிஸ்டர் (1985)**

1986ஆம் ஆண்டுதான் முதன்முறையாக எச்.ஐ.வி. (HIV) நோய் வேலூரில் அறிவிக்கப்பட்டது. விரைவில், இன்னும் சிலர் பாதிக்கப்பட்டதும் தெரிய வந்தது. ஹெபடைடிஸ் (Hepatitis) பி மற்றும் சி க்கான பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

நோய் அறியும் முறையில் (diagnosis) பல மாற்றங்களை லிஸ்டர் கொண்டு வந்தது. 100 சதவிகிதம் ஒழுங்குமுறையுடனும், தொழில்நுட்பத்தைச் சார்ந்தும், அப்பொழுது இருந்த ஏனைய ஆய்வுக் கூடங்களைவிட பலவிதங்களில் முன்னேறி இருந்தது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு மருத்துவரைத் தலைவராக வைத்திருந்த ஒரே ஆய்வகம் அப்பொழுது லிஸ்டர் மட்டும்தான். தரத்திற்கு உத்தரவாதம் இது ஒன்றே என டாக்டர். ஸ்ரீநிவாசன் நம்பினார். செய்தி வெகு விரைவாகப் பரவ, இந்தியா மற்றும் வெளிநாட்டிலுள்ள பிரபலங்கள், இரத்தப் பரிசோதனை செய்வதற்கு லிஸ்டருக்கு வர ஆரம்பித்தனர்.

ஹெச்.ஐ.வி.நோய்க்கிருமி தாக்கியவர்களுக்கான 'மதி உரைஞராக' (counsellor) டாக்டர். சரண்யா இன்னொரு பொறுப்பை ஏற்றுக்கொண்டார். 1992-93 இல் சேகரிக்கப்பட்ட விவரக்குறிப்புகளைக் கொண்டு ஆராய்ச்சி செய்து சில முடிவுகளை வெளியிட்டார் டாக்டர். சரண்யா. அதன்படி, எச்.ஐ.வி.நோய்க்கிருமி தாக்கியவர்களுள் பெரும்பாலானோர், அதற்குமுன் இதயக்கோளாறு உள்ளவர்களாகவோ, சுமார் ஒரு ஆண்டுக்காலத்திற்கு முன்பாக இரத்தம் ஏற்றப்பட்டவர்களாகவோ இருந்திருக்கிறார்கள்.

மனதைப் பிழியும் ஒரு சம்பவம் அப்பொழுது அங்கு நிகழ்ந்தது. 9 மாதக் குழந்தைக்குத் தாயாரிடமிருந்து ஹெச்.ஐ.வி. நோய்க்கிருமி தொற்றியிருந்தது. சிறுநீரக சம்பந்தமான நோய் இருந்த அவர் ஒரு மருத்துவமனையில் கூழ்மப்பிரிப்பு (Dialysis) செய்துகொண்டபொழுது, அந்த நோய்க்கிருமி அவரைப் பற்றிக்கொள்ள, குழந்தையைப் பெற்ற சில மாதங்களுக்குள்ளாகவே அவர் இறந்து விட்டார். எய்ட்ஸ் நோயின் அறிகுறிகளை குழந்தையிடம் கண்டுகொண்ட தந்தை பரிசோதனைக்காக லிஸ்டருக்குக் குழந்தையை அழைத்து வந்தார்.

இரத்த வங்கியின் அவசியத்தை அப்பொழுது டாக்டர். ஸ்ரீநிவாசனிடம் கூற, அதனைப் பராமரிப்பது ஒரு மிகப் பெரிய விஷயமாகையால், டாக்டர். ஸ்ரீநிவாசன் உடனேயே அதற்கு அனுமதி மறுத்துவிட்டார்.

மற்றொரு சமயத்தில், குஜராத்தைச் சேர்ந்த ஒருவர் 'லிஸ்டருக்கு' வந்தார். ரயில்வே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அவருடைய மனைவிக்கு அவசரமாக 'ஓ+' இரத்தம் தேவைப்பட்டது. அன்று விடுமுறை தினம் (ஆகஸ்ட் 15) ஆனதால், இரத்தம் வழங்குபவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்குக் கடினமாக இருந்தது. அப்பொழுது அங்கு இருந்த திரு.ஏ.வி.எம். சரவணன், தமது 'ஹேம்' வானொலி மூலம் பலரைத் தொடர்பு கொண்டு, தேவையான இரத்தத்தை சேகரித்துக் கொடுத்தார்.

**ஜீவன் இரத்த வங்கி(1995)**



பாதுகாப்பான இரத்தம் கிடைப்பது ஒரு தற்செயலான நிகழ்வாக இருக்கக்கூடாது. இந்த எண்ணம் டாக்டர். சரண்யாவின் மனதை எப்பொழுதும் அரித்துக்கொண்டிருந்தது. அவரது ஆய்வுகள் மிகத்தெளிவாக இதையே பறைசாற்றியது. டிசம்பர் 31, 1994 ஒரு சாதாரணமான இன்னொரு தினமாகத்தான் இருந்தது டாக்டர். சரண்யாவிற்கு. தனது அன்றைய தின வேலைகளை முடித்துவிட்டுக் கிளம்பும் தருவாயில், பிறக்க இருக்கும் ஆண்டில் தாம் செய்யப்போகும் முக்கிய செயல்களை குறிப்பெடுத்துக் கொண்டிருந்த டாக்டர். ஸ்ரீநிவாசனிடம், ''இன்று வீடு திரும்பும்பொழுது விபத்து ஏற்பட்டால், உங்களுக்கு எங்கிருந்து இரத்தம் கொணர்ந்து வர வேண்டும்?'' என்ற கேள்வியைக் கேட்டார்.

அந்தக் கேள்வி டாக்டர். ஸ்ரீநிவாசனை சரேலெனத் தாக்கியது. இரவு முழுவதும் விழியிமைக்காமல் யோசித்த அவர், அடுத்த நாள் காலை 6 மணிக்கு டாக்டர். சரண்யாவை அழைத்து இரத்த வங்கிக்கு, ஒப்புதல் தெரிவித்தார். அன்றிலிருந்து சரியாக 9 மாதங்கள் 24 நாட்கள் கழித்து, செப்டம்பர் 9 ஆம் நாள் (1995 ) 'ஜீவன் இரத்த வங்கி' ஒரு அறக்கட்டளையாகத் துவக்கப்பட்டது.'ஜீவன்' என்ற பெயரை பரிந்துரைத்தது அறக்காப்பாளர்களில் ஒருவரான திரு.ஏ.வி.எம்.சரவணன்.

இந்தியாவிலேயே முதன்முறையாக 100 சதவிகித இரத்தம் கூறுகளாகப் பிரித்தெடுக்கப்பட்டது ஜீவனில் தான். இதனால் ஒரு அலகு (Unit) இரத்தம் பலருக்கும் பயன்பட்டது. சுந்தரம் மருத்துவ நிறுவனத்தின் (Sundaram Medical Foundation) கூட்டாண்மையுடன் தொடங்கப்பட்ட 'ஜீவன்' தரம் வாய்ந்த இரத்தத்தினை அளிக்கும் பொறுப்பேற்றுக்கொண்டது. இவர்கள் அளிக்கும் இரத்தத்தை சேமித்து எப்பொழுது தேவையோ, அப்பொழுது உபயோகப்படுத்த வேண்டும்-ஒரு மருத்துவமனை செய்ய வேண்டியது அவ்வளவே. 'ஐ.எஸ்.ஓ' (ISO) தரச்சான்றும் (1999), 'என்.ஏ.பி.எச்' (N.A.B.H.) சான்றிதழும் (2010) பெற்ற முதல் இரத்த வங்கி 'ஜீவன் இரத்த வங்கி'.

'லிஸ்டரை' வேறு ஒருவருக்கு விற்றுவிட்டு, இரண்டு மருத்துவர்களும் ஜீவன் இரத்த வங்கியில் தமது முழுநேரத்தையும் செலவிடத் தொடங்கினர். வருடத்திற்கு சுமார் 10,000 பேர்கள் அளிக்கும் இரத்தத்தை வாங்கி சேமித்து வரும் 'ஜீவன்' இரத்தம் சேமித்து பாதுகாப்பதில், ஒரு மிகப்பெரிய தரத்தை உருவாக்கியிருக்கிறது.

2005ஆம் ஆண்டில் தலசீமியா (Thalassemia) நோயால் பாதிக்கப்பட்ட 25-30 குழந்தைகளுக்கு இலவசமாக உதவியளித்தது 'ஜீவன்'. தலசீமியா நோயாளிகளுக்கு ஒரே வழி 'மூல உயிரணு' (Stem Cell) மாற்றி நடுவதுதான் (Transplantation). மூல உயிரணுவின்



அடிமூலமான இரத்த தண்டு (Blood Cord) 99 சதவிகிதம் வீணே விரயமாகத்தான் போகிறது.

பொது இரத்த தண்டு அணு வங்கி
(Public Blood Cord Cell Bank) 2005

ஜீவன் இரத்த வங்கி, இரத்த தண்டு அணு வங்கியைத் தொடங்கியது ஒரு இயற்கையான நிகழ்வு. இது நிறைய பொறுப்புகளைக் கொண்ட ஒரு பெரிய முயற்சி. 30,000 அலகுகள் (Units) இதன் இலக்கு. 6-7 வருடங்களில் சேர்ந்ததோ 600 அலகுகள்தான். தமது சேமிப்பை எல்லாம் இதில் முதலீடு செய்த ஸ்தாபகர்களுக்கு இப்பொழுது 3 கோடி ரூபாயாக கடன் பெருகியது. ‘2012 இறுதிவரை பார்க்கலாம். பிறகு மூடியே விடலாம்’ என்று யோசனை செய்து, டிசம்பர் வந்த பிறகு, இன்னும் 3 மாத அவகாசம் கொடுக்கலாம் என்று முடிவு செய்தார் டாக்டர். ஸ்ரீநிவாசன்.

2013ஆம் ஆண்டு ஃபிப்ரவரி மாதம் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியிலிருந்து, செயல்திட்டத்திற்கு உதவி செய்வதாக மின்னஞ்சல் ஒன்று வந்தது. எனினும், எவ்வளவு கொடுப்பார்கள், வட்டி விகிதம் என்ன, துணைப்பிணையம் (Collateral Security) தேவையா என்ற கேள்விகள் மனதில் தோன்ற, வங்கிக்குச் சென்றார். உலக வங்கியின் உதவியுடன் அவர்கள் 15 கோடி ரூபாய் அளிப்பதும், 1 சதவிகிதமே வட்டி என்பதும், துணைப்பிணையமோ வேறு உத்தரவாதமோ தேவையில்லை என்பதை அறிந்தார். இதைத் தவிர தமிழ்நாடு அரசு 9 கோடி ரூபாய் மானியத் தொகையாக வழங்கியது.

‘‘எதை நீங்கள் செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அதில் முழுமையாக இறங்கி விடுங்கள். தானாக வழி பிறக்கும்’’, என்று நம்பிக்கை மிளிரக் கூறுகிறார் டாக்டர். ஸ்ரீநிவாசன். இதற்காக சில தியாகங்களும் செய்ய வேண்டியிருக்கும். நோயை மிகச் சரியாகக் கண்டுபிடிப்பதனால், ‘ஷெர்லக் ஹோம்ஸ்’ என்று செல்லமாக தனது பேராசிரியர்களால் அழைக்கப்பட்ட டாக்டர். ஸ்ரீநிவாசன், மருத்துவத்தொழிலை விட வேண்டியிருந்தது. எனினும், இதனால் மனவருத்தம் ஏதும் இல்லை என்கிறார் இவர்.

சில நோயாளிகளுக்கு ஒரே தீர்வு, பொருத்தமான இரத்த தண்டு (Blood Cord) கிடைப்பதுதான். இனவேறுபாடு காரணமாக, வெளிநாட்டிலிருந்து வருவது பெரும்பாலும் பொருந்துவது இல்லை. பல லட்சங்கள் இதற்காகச் செலவழியும் என்பதால், உள் நாட்டிலும் இதற்கு வாய்ப்புகள் குறைவு. ஆனால், ’ஜீவனில்’ இப்பொழுது 3,600 இரத்த தண்டு அணுக்கள் இருக்கின்றன. இவர்களது இலக்கு 30,000. இதனால், தேவை ஏற்படும்பொழுது கிடைக்கும் வாய்ப்புகள் அதிகம். இவ்வளவு தண்டு அணுக்கள் இருக்கும் ஒரே வங்கியான ‘ஜீவன் வங்கி’க்கு, ஒரு வாரத்திற்கு 10 விண்ணப்பங்களாவது வருகின்றன.

எலும்பு மஜ்ஜை பதிவகம்
(Bone Marrow Registry) 2015

10 வருடங்களுக்கு ஒருமுறை ஒரு புதிய முயற்சியில் இறங்கும் டாக்டர். ஸ்ரீநிவாசன்/டாக்டர். சரண்யாவின் அடுத்த முனைப்பு ‘எலும்பு மஜ்ஜை பதிவகம்’ (Bone Marrow Registry ). 30 கோடி ரூபாய் மதிப்புள்ள இந்த செயல் திட்டத்திற்கு இதுவரை 4 கோடி ரூபாய் வரை சில நிறுவனங்கள் வழங்கி இருக்கின்றன. இந்த வருடம் மே மாதம் முதல் செயல்பட்டு வருகிறது இது.

நமது சமுதாயத்தில் கண்டிப்பாகத் தேவைப்படும் உலகத்தரம் வாய்ந்த ஒரு நிறுவனத்தை உருவாக்கி, வளர்த்து, வெற்றி கண்ட டாக்டர். ஸ்ரீநிவாசனுக்கும், டாக்டர். சரண்யாவிற்கும் நமது பணிவான வணக்கங்கள்.

ஒவ்வொரு ஜீவனுக்குள்ளும் புது இரத்தம் பாய்ச்சி வரும் ‘ஜீவன் இரத்த வங்கி’ சென்னையின் முதன்மை சான்ற வெற்றிவாகை சூடிய நிறுவனம்!